ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலகம்

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை

# ஆய்விதழ் அறிவிப்பு

# தொல்தடம்

## தொல்லியல் - கலைப்பண்பாட்டியல் ஆய்விதழ்

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தொல்லியல் – கலைப்பண்பாட்டியல் சார்ந்த ஆய்வுகள் அறிவியல் துணைகொண்டு புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சுகின்றன. அவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனை முன்னெடுக்கும் விதமாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் இணைந்து தொல்லியல் – கலைப்பண்பாட்டியல் ஆய்விதழை மின்னிதழாக வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இந்த மின்னிதழ் ஆண்டிற்கு மூன்று என்றளவில் வெளிவர உள்ளது. இதற்கு தமிழ்நாட்டில் உள்ள அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள், வரலாற்று ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரின் பங்களிப்புகளைக் கோருகிறோம்.

இந்த ஆய்விதழுக்கு பண்டைய வரலாறு, தொல்லியல், கடல்சார் தொல்லியல், தொல்லியல் சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள், கல்வெட்டியல், கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, பாறை ஓவியம், நடுகற்கள், நாணயவியல், பண்டைய இலக்கியம், மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல், மொழியியல், மரபணுவியல், புவியியல் பிற அறிவியல் துறைகள் மற்றும் பண்பாட்டுச் சின்னங்களைப் படியெடுத்தல், பாதுகாத்தல், மீட்டுருவாக்கம் செய்தல் தொடர்பான கட்டுரைகள், தொல்லியல் – கலைப்பண்பாட்டியல் தொடர்பான நூல் அறிமுகம் மற்றும் மதிப்புரை உள்ளிட்ட தலைப்புகளின்கீழ் கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம்.

கட்டுரைகள் பின்வரும் விதிகளுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்.

- தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கட்டுரைகளை எழுதலாம். கட்டுரை 800 முதல் 1200 சொற்களுக்குள் இருக்க வேண்டும் அல்லது A4 வடிவில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- கட்டுரைகள் MS Word இல் Unicode format இல் அனுப்ப வேண்டும்.
- கட்டுரைகளுக்கான குறிப்புகளும் துணைநூற்பட்டியலும் கட்டுரையின் இறுதியில் (Endnote) இடம்பெறும் வகையில் அமைய வேண்டும். இவை Chicago Manual of Style-ஐ பின்பற்றி அமைய வேண்டும்.
- கட்டுரைக்கு தொடர்புடைய படங்கள் ஏதேனும் இருந்தால், அதற்கான குறிப்பு கட்டாயம் இடம்பெற வேண்டும். படங்கள் குறைந்தபட்சம் 300 DPI இருக்க வேண்டும்.
- கட்டுரைகள் இதற்கு முன்பு வெளியிடப்படாமல் இருக்க வேண்டும்.
- எந்தவிதக் கருத்து-எழுத்துத்திருட்டு (plagiarism) இருந்தால், வெளியிடப்படாது.
- புதிய கண்டுபிடிப்புகள் சார்ந்த கட்டுரைகள் ஆய்வாளர்கள் குழுவிடம் அனுப்பி வைத்து ஒப்புதல் பெற்ற பிறகே வெளியிடப்படும்.
- கட்டுரையுடன் கட்டுரையாளருடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படமும் கட்டுரையாளர் பற்றிய சிறுகுறிப்பும் மின்னஞ்சல் மற்றும் தொடர்பு எண் உள்ளிட்டவற்றை இணைத்து அனுப்ப வேண்டும்.
- இதழாசிரியர்களுக்கு கட்டுரைகளைத் திருத்த, சுருக்க உரிமை உண்டு.

**கட்டுரைகளை அனுப்ப விரும்புவோர், வரும் பிப்ரவரி 21ஆம் தேதிக்குள் publication@rmrl.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

இதழாசிரியர்கள்
முனைவர். இரா. சிவானந்தம் | முனைவர். சுந்தர் கணேசன் | திரு. காந்தி பாலசுப்பிரமணியன்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை